TIGHT BINDING

UNIVERSAL LIBRARY
OU_208066
UNIVERSAL LIBRARY

**OSMANIA UNIVERSITY LIBRARY**

Call No. 928.94811 S941B Accession No. Tm. 239

Author Navalar Bhartiyar.

Title - Bhartiyar Charitram. 1955.

This book should be returned on or before the date last marked below.

# பாரதியார் சரித்திரம்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே"

விற்பனை உரிமை:

**பாரதி புத்தக நிலையம்,**

**மதுரை.**

முதற் பதிப்பு நவ. 1955.

**0—8—0**

வெளியிட்டோர்:

**கன்னித் தமிழ் பதிப்பகம்,**

**மதுரை.**

Printed by V. Subburayalu Naidu Press, Madurai:-55.

# பாரதி கவிதையும், வசனமும்

"மன்னவனே! தமிழகத்தில் தமிழறிந்த மன்னர் இல்லை என்னும் வசை நீ மகுடம் புனைந்த பொழுது இருந்ததா!

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்படைத்துத்
தமிழ்மொழியைப் புகழி லேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லையெனும்
வசையென்னாற் கழிந்த தன்றே!"

இவ்வாறு முப்பத்தாறு ஆண்டுகட்கு முன்பு ஒரு தமிழ்க் கவிஞன் ஒரு மன்னவனைப்பார்த்து (ஜமீன்தார் தான்) கூறவேண்டுமானால் அதற்கு அன்றைய நிலையில் எத்தகைய நெஞ்சுரமும் தன்மானமும் தமிழ்ப் பற்றும் அந்தக் கவிஞனுக்கு இருந்திருக்க வேண்டும்?

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொற் புதிது, சோதி மிக்க நவகவிதை, எந்நாளும் அழியாத மகா கவிதை" என்றெல்லாம் இன்று நாம் போற்றுகிறோமே, அவைகளைப் புனைந்த சக்தி தாசனைப் புகழ் வளரும் கவிராஜ சுபபிரமணிய பாரதியே அந்தக் கவிஞன்.

மனிதனை மற்றொரு மனிதன் உதவி கோரும் தருணத்தில் மட்டுமே இவ்வாறு கேட்டார் என்பதில்லை. சக்தியை யோகசித்திக்கு வரங்கேட்ட பொழுதும் கூட இதே உரிமையுடனும் துணிவுடனும் தன் மதிப்புடனும் தான் கேட்டார். சோற்றுக் கலைந்து, வம்புகள் பேசி, மனம் வாடி, துன்பத்தில் உழன்று, பிறரை வாடச் செய்து, நரையும் மூப்பும் எய்திப் பின்கூற்றுக்கு இரையாகும் பல வேடிக்கை மனிதரைப்போல் நான் வீழ்வேனென்று நினைத்

தாயோ? என்று கேட்கிறார் பாரதியார். "உன்னைக் காலால் மிதிக்கவேண்டும் என ஆசை; சற்றே காலருகே வாடா, காலனே!" என்றழைத்த துணிபு என்ன?

இத்தகைய வீர நெஞ்சமும் கலங்கிற்று என்றால் அன்று காலக்கொடுமை எவ்வாறு இருந்திருக்க வேண்டும்? அந்த நிலையிலும் எழுந்தது "ஸ்வசரிதை" என்னும் பாடல். ஓயாமல் கவிதை எழுதிக்கொண்டிருக்கும்படி அருள் வேண்டியவரல்லவா?

பாரதியின் சுயசரிதமே "ஸ்வசரிதை". இதை அவர் பாடியிருக்கும் போக்கிலிருந்து மிகவும் மனம் நொந்து போயிருந்த சூழ் நிலையில் எழுந்த கவிதை இது என்பது நன்கு தெரிகிறது.

இவ்வுலக வாழ்வைப்பற்றிக் கவிஞர் பொதுவாக சிறப்பாகவே தான் பல இடங்களில் பாடியிருக்கிறார். இந்த 'ஸ்வசரிதை' என்னும் நூலில் மட்டும் இக வாழ்வு 'கனவு' என இகழ்ச்சியுடன் கூறுகிறார். நூலுக்குத் தலைப்பில் பட்டினத்தார் பாடல்களிலிருந்து இரண்டு வரிகளைக் கொடுத்திருக்கிறார்! இக்கவிதை முழுவதையும் நோக்குமிடத்து அவர் மனம் முற்றும் வெறுப்புற்ற நிலையில், இந்நூல் எழுந்தது என்பது விளங்கும். "இந்தச் சிறிய செய்யுள் நூல் விநோதார்த்தமாக செய்யப்பட்டது" என்று பாரதியார் ஒரு சிறு குறிப்புக் கொடுக்கிறார். என்றாலும் ஆங்கிலக் கல்வி பற்றி அவர் பாடியுள்ள பகுதி மிகவும் போற்றற்குரியது.

இந்நிலையிலும் கவிதைத் தொழிலை ஓயாமல் நடத்தி வந்த மகா கவிஞனைப் பலர் பலவிதமாகப் போற்றுகின்றனர். அவர்களுக்கு நம் வணக்கம்.

> மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
> மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"

என்று சொல்லத்தகாத, தன்மானம் இல்லாத

பேதையர்கள் சொல்லும் அவல நிலையிலிருந்த கன்னித் தமிழைப் புலவர்களின் கட்டுக்காவலிலிருந்துமீட்டார். சோர்ந்திருந்த தொன் மொழிக்குப் புத்துயிரூட்டி தலை நிமிர்ந்து நிற்கச் செய்தார். அந்நிய மொழிகளின் ஆக்கிரமிப்பால் அழகில் மாசு படிந்திருந்த தமிழின் பொன் முகத்தைப் புதுக்கி வான் புகழ் கொண்ட தமிழைப் பக்தி மரியாதைகளுடன் பிறர் நினைக்கும்படி செய்தான் மாகவிஞன், மந்திரம் போன்ற சொல்லின் பத்தால். வள்ளுவருக்குக் கோயில் கட்டியது போல், பாரதியாருக்கும் கோயில் கட்டி வழிபட வேண்டியது தமிழர் கடன்; மணி மண்டபம் மட்டும் போதாது.

ஆனால், அந்தோ! பாரதியாரைப் பற்றிய குறையொன்றை ஒருவர் சொல்ல அண்மையில் அறிந்து கொண்டேன்! "பாரதியாரின் பாடல்கள் செய்த புரட்சியை அவரது வசன நடை செய்யவில்லை. அதில் வலிமையோ புதுமையோ இல்லை." அதாவது தாக்கு வேண்டியவர் ஒருவரைப் புகழவேண்டின், புகழ்பெற்ற ஒருவரை இகழ்வது இன்றியமையாதது என்ற தீராத சூத்திரத்தின் காரணமாக எழுந்தது இந்த விமாசனம்.

தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுதர மொழிந்திடுதல், சிந்திப்பவற்குக்களிவளர உள்ளத்தில் ஆனந்தக் கனவு பல காட்டுதல்-இதுவே எழுத்தின் நோக்கம். இதைப் பாரதியாரின் கவிதைகள் மட்டுமல்ல, கட்டுரைகளும் நிறைவேற்றின.

"சூரியாஸ்தமன வருணனை", "காற்று" என்றதலைப்பில் ஒரு கீற்றுப் பந்தலில் தொங்கும் இரு கயிறுகளுக்கு உயிருண்டாக்கிக் காதலில் ஈடுபடச் செய்தது, "ஞானரதம்", 'சும்மா' என்ற கட்டுரைகள், 'சிட்டுக் குருவி' இவையெல்லாம் எத்தகைய கட்டுரைகள்! இவைகளைப் படித்த பின்னர் பாரதியார் வசனத்தைக்

குறைகூற யாரேனும் முன்வந்தால் அதைப் பற்றி என்ன சொல்லுவது?

காலத்தையும், அதன் சூழ்நிலைகளையும், தேவைகளையும் கருத்தில் கொள்ளாது பாரதியாரின் வசன நடையைப் புதுமை பித்தனின் வசன நடையுடன் ஒப்பிட்டு முன்னதைக் குறைகூறுவது, சிங்க நடையுடன் அன்ன நடையை எடைபோடுவது போன்ற செயல் தான். தமிழில் வசன நடை ஒரு புதுச்சரக்கு. பாரதியார் காலத்தில் அது ஒரு கைக்குழந்தைத் தலைமையில் இருந்தது. அதற்குப் பாலூட்டிச் சீராட்டி, பிள்ளை நோய்களிலிருந் தெல்லாம் காத்து வளர்த்த தாய் பாரதியார். பெற்றதாய் மிகவும் பழசாய்ப் போனாள் என்றால் காலத்தின் கொடுமை; தாய்மைக் குற்றமன்று. வடமொழிச் சொற்களை அதிகம் பாரதியார் கையாண்டார். அவையும அவரது நடைக்கு வலிமையையும் அழகையும் தந்தன. வடமொழிச் சொற்கள் மொழி வெறியர்கள் கண்களை உறுத்தலாம். தூயதமிழ்க் காதல் மட்டுமே அதற்குக் காரணம் என்றால் ஓரளவு நலம். ஆனால் உண்மை வெகு தொலைவில் இருக்கிறது.

தமிழ் இன்றுள்ள உயர்வை மீண்டும் அடைந்ததற்கு முக்கிய காரணம் பாரதியார். இந்தப் பணிக்கு நன்றிகாட்டுவது தமிழ்ச் சாதியின் தனிக்குணம். அதை ஓரிருவர் குறைத்துவிட இயலாது.

ஜாதி, மதம், உயர்வு, தாழ்வு, பணக்காரன், ஏழை, மன்னன், மக்கள் போன்ற கீழ்மைப் பேதங்களைக் காரி யுமிழ்ந்தான் கவி. வலிமையை வா, வா வென்று வர வேற்றுவாழ்த்தினான். கீழ்மையையும் அதை வேண்டும் தன்மையையும் விரட்டி யடித்தான். புதிய ஆத்திசூடி புனைந்து கொடுத்தான். காந்திக்கு பஞ்சகமும், திலகனுக்கு வாழ்த்தும்; வ. உ. சி. போன்ற தலைவர்களை

யெல்லாம் தலை வணங்கினான். தமிழைப் பாடினான். தமிழ்ச் சாதியை வணங்கினான். இயற்கை அழகை யெல்லாம் இன்றமிழ் நூலாக்கினான். ஞானரதத்தில் ஏறி, சித்தக் கடலைக் கடைந்து, தராசில் நம் தத்துவம், மாதர், கலை, சமூகம் எல்லாவற்றையும எடை போட்டான். நல்லன யாவையும் நாடுறுமாறு செய் தான் கவி. கண்ணன் பாட்டு, குயில், பாஞ்சாலி சபதம் இக்காவியங்கள் மூலம் தன்னை உலக மகாகவிகள் வரிசையில் சேர்த்துக்கொண்டான் அமரகவி.

"பார் மீது நான் சாகாதிருப்பேன்" என்று மார்பு தட்டி, காலனைச் சற்று காலால் மிதிக்க விழைந்த கவிஞன்! காலத்தை வென்று இன்றும் வாழும் கவி அமரன் தான்! அக்கவிஞனுக்கு அவனது அடிச் சுவட்டையே பின்பற்றி ஒரு பஞ்சகம்.

## பாரதி பஞ்சகம்.

1 வாழ்க நீ! மாகவியே, இந்த
வளமிக்க தமிழ் நாட்டில்
மாந்தர் மதி கெட்டு
விதேச மோகம் மிஞ்சி,
நற்றவ வானினு முயர்ந்த
நந்தாய் மொழியாந் தமிழைப்
புறக்கணித்த புன்மை போக்கிய
புனித பாரதி நீ வாழ்க!
2 பிறமொழி மோகமற்றுத் தமிழர்
பெட் புயர, கலையும்
கவிதையும் இலக்கிய ஞானமும்
கன்னித் தமிழா லூட்டி
தமிழர் சேமமுற வேண்டித்
திசை யெட்டுங் கவிமுழங்கிச்

செயற்கரிய செய்த பெரியோய்
    கவிகளுள் முதன்மை யுற்ருய்!

(வேறு)

3 விடுதலை முரசு கொட்டிச்
    சமதாமக் கவிதை பாடி
சொல்லில் மந்திர வின்பங்காட்டி
    பண்ணி லினிய பாடலிசைத்து
விண்ணின்பம் தமிழில் நாட்டி
    வீணை யொலியும் அதிலே கூட்டி
விந்தை செய்த கவிப்பிரம்மா
    வீர விளக்காம் பாரதி!

4 சக்தி சக்தி யென்று முழங்கி
    சக்தி மிகுந்த பாக்க ளியற்றி
தமிழ் தமிழ் என்றே பேசி
    தமிழின் அமிழ்தச் சுவையே கமழ
பண்பு மிகுந்த தமிழன் நலமே
    பண்ணின் உயிர் மூச்சுக் காற்ருய்
உயிரினு மினிய உயரிய கவியால்
    உணர் வூட்டினன் பாரதி.

5 அடிமை விலங் கறுக்கும் கவிதை
    அன்பு வொளி பரப்பும் கவிதை
பெண்ணின் பெருமை சொல்லும் கவிதை
    பேரின்பம் மண்ணில் காட்டும் கவிதை
பேத புத்தி யொழிக்கும் கவிதை
    பேதமைப் பேயோட்டும் பெருங் கவிதை
பாக்களி லுயர்ந்தது பாரதி கவிதை
    பாரினி லுயர்ந்தது தீந்தமிழ்க் கவிதை!

பாரதியைப் பற்றி

# நாவலர் பாரதியார்

## சரித்திரச் சுருக்கம்

---

ஸமீபத்தில் காலஞ்சென்ற புலவர் திலகர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழகமே யன்றிப் பிறிதுலகும் சிறிதறியும். இவர் புகழ் எம்மனோர் போற்றப் பெருகுஞ் சிறுமையுடைத்தன்று. புகழிற் போலவே வயதிலும் இவர் நண்பக லெய்தாக் காலை ஞாயிறேயாவர். நாடு மூடிய கால மேகங்களிலும், நடு நிலை பிறந்த ஓர் உணர்ச்சி யிருளிலும் மறைந்து மாசற்ற விண்பெறுத் தற்காலத் தமிழ் நாட்டில் வெயில் செய வெள்கி இவர் பெரிதும் ஒளிர்ந்தார்.

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் மதித்தற்குரியவும் அரியவுமாம் குணம் பல வுடையார். இவரை நயப்பார் பலர்; வெறுப்பார் சிலர்: இவர் மாட்டு இவ்

விரு திறத்தாரும் வியக்குங் குணமும் பலவாம். இவரைத் தமிழ்நாடு செய்த தவமென்பார் உளர்: வாணாளை வீணாக்கி, பல கற்றும் உலகத்தோ டொட்ட வொழுகும் நலங் கல்லாராகக் கருதும் பிறரும் உளர். பலர் இவரைத் தமிழகத்தே தலை நின்ற தேச பக்தராக வந்திப்பர்: தன்னலம் பேணாதார், பிறர் நலமும் அறிய வொண்ணாரென்று இவரை நிந்திப்பாரு முண்டு. அறிவை அடிமைப் படுத்தி, உணர்வைக் கொள்ளை கொண்டு, 'நெஞ்சை அள்ளும்' அருங்கவி விரைந்தியற்றவல்ல அமுதவாய்ப் புலவர் இவரெனப் பலர் பாராட்டுவர்.

இப்பெரியோர் ஜீவியத்தில் ஒரு பகுதி எழுதுவதற்கு நான் உரியனென்று இவர் மனைவியார் விரும்பியது ஒருவாறு பொருந்துவ தாகும். உற்ற சுற்றத்தின் புறம்பே, இளமைப் பருவத்து இவரோடு நெருங்கிப் பழகிய பல நள்ளுநம், விருட்பத்தகும் இவர் இனிய குணங்கள் பலவற்றை அறிதற்குதவுங் காலத்தானும் அணிமையானும் நான் சிறிது அதிக உரிமை பாராட்டற் கிடமுண்டு. சென்ற பதினைந்தாண்டுகளாகச் சிறிதுஞ் சல்லாபத்திற் கிடமின்றி அறப்பிரிந்தேமாயினும், அதற்குமுன் இளமையில் தொடர்ந்த நெருக்கமும், சிறிதிடைப் பிரிந்து பின்னிடையறாதுடன்பயின்று சோராது வளர்ந்த நேசமும் எனக்கு இவரிடத்துண்டு. இவர் சென்னையில் வஸிக்கச்சென்ற காலமுதற்றான் இவர் வாழ்க்கை அத்துணையாக நான் நேரில் அறியாததாம். இவ்வாறு பிரிந்த இப் பின்

காலத்தும் வெளிவந்த இவர் பாடல்களும் பத்திரிகை வியாஸங்களும் பெரும்பாலும் நான் படியாதன இரா. இவர் ஸமுதாய வாழ்வை (Public life) யும் இயன்ற வரை கவனித்து வந்துளேன். உழுவலன்பு காரணமாக இவர் தம் விழுமிய நூல்கள் பற்றி இடையிடையே எனக்கெழுதுவதும் உண்டு. இவைகளிலிருந்து முன இவர் பால் நான் நேரிலறிந்த பெருங்குணங்களொன்றேனும் மாறுபட்ட சான்று கிடைத்ததில்லை. ஒருவர்க்குரிய குணங்கள் மாறுது வேறொன்றும் பருவங் கழிந்தபின்னரே இவர் தம்மூரையும் உற்ருேரையும் விட்டுச் சென்னை சென்ருர். ஆகவே இவை கொண்டு ஒருவாறு இப்புலவர் திலகர் ஜீவியத்தில் பிறரறிய விரும்புவனவும தகுவனவுமாய் சிலவற்றை யீண்டு விளக்க விடைகொள்வேன்.

இவர் தந்தையாரை யான் அறிவேன். முயற்சி திருவினை யாக்கும் என்ற முதுமொழிக்கு இலக்கியமானவர். எட்டையபுரம ஸமஸ்தானத்தில உத்தியோகஸ்தரும் வித்வானுமாயிருந்து சிறந்த ஸ்ரீ சின்னஸாமி அய்யரவர்களை அவர் காலத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் அறியாதவரில்லை. இவர் பிராஹ்மண பிரமஞேத்தமர். அக்காலததிலேயே இவர் கலாசாலையுதவியின்றி ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார். தமிழில் அதி பண்டிதர். மேல்நாட்டுக் கணித முறைகளில் கைகண்ட நிபுணர். தர்க்கத்தில் தன்னிகரற்றவர். இவரது கூரிய மதி நுட்பமும், நாவன்மை

யும் இவரன்பை விரும்பாப் பண்டிதர் யாவருக்கும் அச்சம் விளைத்தது போலவே, இவரது பெருங்குண மும் விரிந்த உள்ளமும் இவர்பால் அழுக்காறு கொள் ளாத யாவருடைய மதிப்பையும், நேசத்தையும் உரிமை யாக்கின. முப்பது வருடங்களுக்கு முன்னரே, ஏழைகள் மீது இரக்கத்தாலும், நம்மவர் நலங்கருதியும், இவர் எட்டையபுரத்தில் யந்திரமணைச்சாலை யேற் படுத்த முன்னின்று முயன்று முடித்தார். இந்தப் பிரதேசத்தில் பருத்தி யந்திர மணைச்சாலை முதலில் ஏற்படுத்தத் துணிந்தவர் இவரே. தற்காலம் எட்டைய புரம் ஸமஸ்தானதிபதியா யிருக்கும் பண்டித அரச ருக்கு இவர் ஆப்த நட்பாளர். தனிகரும் பொதுநலப் பிரியரும் அருகிய வூரில் இவர் முயன்று ஸ்தாபித்த பருத்தி யறவைச்சாலை தற்காலம் பராதினப்பட்டு நடப்பதன் சரிதமும், தொழிலபிவிருத்தி முதலிய நம்மவர் முன்னேற்ற முயற்சிகளால் இவர் கைப்பண மிழந்து வறுமையுற்று வருந்திய விருத்தாந்தங்களும் இக்கதைக்கு அவசியமற்றவை. இத்தகைய அருள், அறிவு, ஆற்றல் நிறைந்திருந்த ஸ்ரீ சின்னஸாமி அய்யர் அவர்களுக்கு அவர்களின் முதன் மனைவியார் வயிற்று தித்த ஔரஸ புத்திரரே நம் வரகவி. பாரதியாரின அன்னையாரை நான் நேரில் அறியேன். அந்த அம்மையா ரை அறிந்த அனைவரும் அவர் அழகிலும், அருளிலும் அவர் இயற்பெய ரொப்ப லக்ஷ்மியே யென்பர். இந்த தம்பதிகளின் தவப்பயனைப் பாரதியார் 1882-ஆவது வருஷம் கார்த்திகை மாதத்தில், சுபதினத்தில், நல்ல

வேளையில், எட்டையபுரத்தில் அவதரித்தார். பெற்று மகிழ்ந்த தாயார் இவர் புகழ் கேட்டுப் பின்னும் மகிழப் பெறுமுன்னே, நமது கவியின் ஐந்தாவதாண்டிலேயே, பரமபதம் எய்தினர். அதுமுதல் இவர் தந்தையாரே தாயுமாயிருந்து பாந்திப் பரிந்து பராமரிக்க, பாரதியார் அறிவிலும், உருவிலும் ஒப்புயர்வற்று வளர்ந்து, ஊர் உவலை சொல்ல யாவரும் அதிசயிக்கத் திகழ்வதானார்.

நமது மஹாகவியின் தந்தையார் தமது குலாசாரத்தை அனுஷ்டித்துச் சௌளம் உபனயனமாதி ஸமஸ்காராதிகளைக் காலாக்ரமத்தில் செய்துவைத்து, ஐந்தாவதாண்டில் அக்ஷராப்பியாஸமும் செய்து வைத்தார். பள்ளிக்கூடங்களில் சென்று பயின்றதன் பிரயோஜனத்தை இக்காலப் பள்ளிக் கூடங்களின் அநுபவமுள்ளவர்கள் அறிந்து கொள்ளலாம். பாரதியார் தமது 'ஏழாவது' பிராய முதலே அருமையான தமிழ்க் கவிகளை விளையாட்டாக விரைந்து கவனஞ்செய்வதைக் கண்ட வித்வான்கள் நமது கவியின் தந்தையாரைப் புகழ்ந்திருப்பதை நான் நேரில் அறிவேன். எட்டு ஒன்பதாவது ஆண்டுகளில், ஸர்வ சாதாரணமாய், கொடுத்த ஸமஸ்யைகளை வைத்து அற்புதமான கவிகளைப் பூர்த்தி செய்து பெரிய புலவர் கூட்டங்களைப் பிரமிக்கச் செய்த பல காலங்களிலும் நான் கூட இருந்திருக்கிறேன். காளிதாஸன், கம்பன் முதலிய வரகவிகளுக்குக் காளி வாக்கில் எழுதிய கால முதல், அநாயாஸமாய்க் கவி சொல்ல வாய்ந்ததென்று

நாம் கேட்கும் கதைகளையும், குமரகுருபரர் ஐந்தா வதாண்டில் அரும்பாக்கள் இயற்றினர் என்ற கதை யினையும், அபூர்வ கற்பனைகளென்று புறக்கணித்த நான், பாரதியார் ஏழாவது வயது முதல் எளிதில் பாடலியற்றித் தமிழ்வாணர்கள் மெச்சும்படி காட் டிய திறமையை நேரில்கண்டபொழுது தான், கேவலம் படிப்பினால் பாவன்மை வராது, கவிகள் பிறப்பிலேயே அமைய வேண்டு மென்று அறிந்தேன். பாரதியார் பதினோராவது ஆண்டில், புலவர்கள் கூடியதோர் பெருஞ் சபையில், புதிது புதிதாகக் கொடுத்த அடி களைக்கொண்டே பூர்ண கவிகளை விரைந்தியற்றிச் சபையோரை வியப்பித்த போது, அவருடைய கவித் திறமையையும், அமிர்த வாக்கையும் கண்டு சந்தோ ஷப்பட்ட புலவர்களால் முதல் முதல் "பாரதியார்" என்ற பட்டமும் கொடுக்கப் பெற்றார். அன்று முதல் இவரை யாவரும் பாரதியாரென்றே அழைக்க ஆரம் பித்தார்கள். தற்கால முறைப்படி, இவர் ஆரம்ப முதல் ஆங்கில கலாசாலைகளிலேயே படிப்பிக்கப் பெற்றாரே யன்றித் தனித் தமிழ் ஆசிரியர்களிடத்தில் தமிழ்ப்பாடம் கேட்கவில்லை. இவர் தந்தையார் இவரு டைய கல்வியில் விசேஷ கவனஞ் செலுத்தியதுண்டு. இளம் பருவத்திலேயே பாஷையிலும் கணித முதலிய சாஸ்திர பாடங்களிலேயும் ஸமமாகச் சிறந்து விளங்கி னார். அதிகமாகப் பேசுகிறதில்லை. குழந்தைகள் எல் லோரோடும் சேர்ந்து விளையாடுவதிலும் பிரியப் பட்டார். தனக்குற்ற தோழராகிய இரண்டொரு ஸஹ

பாடிகளோடு மட்டும் பூராக்காலத்தையும் போக்கி வருவார். தேகப்பயிற்சியில் இவர் குழந்தை முதலே லக்ஷியமில்லாதவர். ஒழிந்த நேரமெல்லாம், ஜனப் பழக்கங் குறைந்த கோவில் மூலைகளிலும் தோட்டங் களிலும், குளக்கரைகளிலுமே தனித்தும், தம் உற்ற தோழரோடும் கழித்து வந்தார். ராமாயணம, பார தம் முதலிய இதிகாஸக் கதைகளில் அதிகம் பிரேமை யுள்ளவர். இவ்விதம், பதினைந்தா மாண்டளவில் இவர் காலம் எட்டைய புரத்தில் கழிந்தது.

1897-ஆம் வருஷம் ஆனி பதினைந்தில் பாரதியா ருக்குக் கடையத்தில் ஸ்ரீ செல்லப்பா ஐயரவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி செல்லம்மாளுடன் விவாஹம் நடந் தது. அங்கு வந்திருந்த ஹரிகேசவநல்லூர் முதலிய பலவூர்த் தமிழ் வித்துவான்களும் இவர் புலமை கண்டு, அளவற்ற ஸந்தோஷ மடைந்தார்கள். விவாஹ மான மறு வருஷமே இவர் தந்தையார் தேஹவியோக மானார். அதன் பயனாக பாரதியார் 1898-ஆம் வருஷம் காசிவாஸியாக நேர்ந்தது. இடையில், திருநெல்வேலி யில் ஹிந்து கலாசாலையில் சுமார் மூன்று வருஷம் மாணுக்கராக இருந்தார். அப்பொழுது ஏற்பட்டிருந்த வகுப்பு முறைப்படி மூன்றுமுதல் ஐந்து பாரம் வரையும் அக்கலாசாலையில் படித்தார். அக்காலத்தில் கலாசாலைத் தமிழாசிரியருடனும் காலஞ்சென்ற ஸ்ரீ நெல்லையப்ப கவிராயரவர்கள் வீட்டில் ஓயாது கூடும் வித்வான்களுடனும் இவர் இட்ட தமிழ்ப் போர்களின் தொகைக்கு அளவில்லை. இவர் ஸல்லா

பத்தை மிகவும் விரும்பிய கவிராய ரவர்கள் இவரை மிகவும் பரிவாக ஆதரித்து வந்தார்கள். அந்தக் காலங்களில் இவருடைய அருமையான கவிதாசக்தியையும், மாற்றலரை வாயடக்கும் புத்திக் கூர்மையையும், பேச்சுவன்மையையும் காட்டக்கூடிய சதைகள் பலஉண்டு. அவற்றையெல்லாம் விரிக்கில் பெருகுமென்றஞ்சி விடுக்கின்றேன். இரண்டு சந்தர்ப்பங்களில் எதிர்பாராத வண்ணம் இவர் தன்னை ஏளனம் பண்ணிய வயது முதிர்ந்த இரண்டு தமிழ் வாணர்களைத் தலை குனியச் செய்தார். அப்போது, எப். ஏ. பிரதம (ஸீனியர்) வகுப்பில் படித்துக் கொண்டிருந்தவரும், தமிழ்ப் பழக்கமுள்ள சோணாசலம் பிள்ளை யவர்களின் குமாரருமாகிய காந்திமதி நாத பிள்ளை யென்றவர்கள் முருகதாஸ் ஸ்வாமிகளின் பழக்க முள்ளவர்களும், விசேஷமாகத் தமிழ்ப்பயிற்சி யுள்ளவர்களுமா யிருந்தார்கள். அதுபற்றி அடிக்கடி, பாரதியாரும் நானும், அவர்கள் வீட்டிற்குப் போவதுண்டு. ஒரு சமயம், பலர் கூடியிருக்கும்பொழுது, கூடியவர்கள் எல்லாருள்ளும் இளைஞரான பாரதியாரை அடக்க நினைத்துக் காந்திமதி நாத பிள்ளை யவர்கள், 'பாரதி சின்னப் பயல்' என்ற கடையடியைக் கொடுத்து, அதை வைத்து ஒரு வெண்பாவைப் பூர்த்தி செய்யும்படி நமது புலவரைக் கேட்டார். அவர் சொல்லி வாய்மூடுமுன், கேட்டவர் வியக்க, காந்திமதி நாத பிள்ளை தலைகுனிய, அங்குள்ள யாவரும் இவர் என்ன சொல்லப் போகிறாரென்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே தனக்குக் கொடுத்த அடியைக் கடையடியாக வைத்து வெண்

பாவைப் பூர்த்தி பண்ணினார். அதன் மூன்றாமடியின் இறுதி "காந்திமதி நாதனை" என்று வைத்து,

————— காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்

என்று பாட்டை முடித்தார். அனைவரும் அதிக ஆச்சரியமடைந்தார்கள். மற்றொரு நாள் கலாசாலையில் இவர் பால் அஸூயை கொண்ட தமிழ்ப்பண்டிதர் வகுப்பில் 'காலரி'யில் உயர்ந்த இடத்தில் உட்கார்ந்திருந்த நமது பாரதியார் தம் கேள்விக்கு விடை சொல்லாததற்காக 'மேகம் போல் கவிகள் பொழிவதாக, ஊரிலே புகழப்படுகிறீர், நேரான இடத்திலும் இருக்கின்றீர், காளமேகம் போல் பொழியாமல் சும்மா இருப்பதேன்?" என்று கேள்வி பண்ணினார். உடனே நமது கவி, உட்கார்ந்தபடியே "பண்டிதரவர்களுக்கு மேகத்தின் ஸாமான்ய குணம் கூடத் தெரியாமல் இருக்கிறதே? காளமேகம் தனக்குத்தோன்றிய பொழுது மழை பொழிவதன்றிப் பண்டிதர் உத்திரவுக்குப் பயந்து பெய்வ தில்லையே. இஃதறியாமல் தன்னைப் பேசும்படி கட்டாயப்படுத்தும் பண்டிதரிடத்தில் பரிவுகாட்டுவ தெப்படி?" என்று விடை கூறினார். அதுகேட்ட வகுப்பு மாணக்கர் அனைவரும் கைகொட்டி நகைக்கப் பண்டிதர் வெட்கமடைந்தார். இப்படியே பல சமயங்களிலும் தன்னோடெதிர்த்த புலவர்களை இவர் அதி சமர்த்தாய் அடக்கிய சந்தர்ப்பங்களெல்லாம் இவருடைய ஆச்சரிய புத்தியையும், தமிழ்த் திறத்தையும் நன்கு விளக்கக்கூடியவை.

தந்தையார் இறந்த பிறகு தனக்கு ஆதரவும் துணையும் இல்லாமல் தன் தகப்பனுடன் பிறந்த அத்தையார் அழைக்க 1901-ஆம் வருஷம் காசிக்குப் போனார். அங்கே ஒரே வருஷம் இருந்தார். அலகாபாத் சர்வகலாசாலையில் தமிழ்ப்பாடம் இல்லாமை பற்றி அங்கே இவர் ஸமஸ்கிருதம் புதிதாக எடுத்துப் படிக்க நேர்ந்தும், அந்த ஒரு வருஷத்திலேயே மேற்படி சர்வகலாசாலையில் பிரவேசப் பரீக்ஷைக்கு ஆஜராய், முதல் வகுப்பில் தேறினார். சில அசௌகரியங்களால் அங்கிருந்து மேற்படிக்க முடியாமல், திரும்ப எட்டைய புரத்திற்கு வர நேர்ந்தது. வந்த பிறகு 1904-ஆம் வருஷம் வரை, கலாசாலையில் சென்று படிக்க மார்க்க மன்னியில், அப்பொழுது, எட்டையபுரத்தில் யுவ ராஜாவாயிருந்த அரச வித்வானிடம் தமிழ்ச்சல்லாபம் செய்தும், அரண்மனையில் அபிமானித்துக் கொடுத்து வந்த சொற்பப் பணத்தைக்கொண்டு காலங் கழித்தும் வந்தார். அக்காலங்களில் எட்டையபுரம் சமஸ்தானாதிபதியின் மேலும், அவர்கள் முற்கூடும புலவர் ஸபைகளில் எழும் போட்டி காரணமாகப் பலவேறு விஷயங்களைப் பற்றியும், பாரதியார் பாடிய பாடல்களுக்கு அளவில்லை. முக்கியமாக ஒரு சந்தர்ப்பத்தை நான் மறக்க முடியவில்லை. ஒருநாள் காலையில் சில புலவர்கள் "பாரதியார் விழுமிய கருத்துக்களடங்கிய தமிழ்க் கவிகளைப் புலவர்கள் மேச்ச விரைவாக இயற்றினாலும் அண்ணாமலை ரெட்டியாரைப்போலப் பாமரரும் ரஸிக்கும் படியாக சங்கீத அமைப்புடன், சிந்துகள் முதலிய

இசைத் தமிழ்ப்பாக்களை இயற்ற முடியா" தென்று சொன்னார்கள். அப்போது அரசரும் அதை ஆமோதித்து, தமிழுலகத்திலேயே அண்ணாமலை ரெட்டியாரைப்போல இனி யாரும் கவி சொல்ல முடியாது என்று கூறினார்கள். அதைக்கேட்ட நமது வரகவி சிரித்தார். உடனே அந்தச் சபையார் இவர் ரெட்டியாரைப்போலக் கவி சொல்ல முடியுமானால், செய்து காட்ட வேண்டுவதன்றி, வீணாகச் சிரிப்பது பெருமையில்லை யென்று ஏளனம் பண்ணினார்கள். பாரதியார் அன்றே ஒரு சிந்தியற்றிக்கொண்டு வருவதாகச் சொல்லி விடை யேற்று வீடு சென்றார். அன்று மாலை அரண்மனைக்கு பாரதியார் போன பொழுது, வித்வான்கள் ஒருவரும் வரவில்லை. ஆனால், இவர் தான் பாடிக்கொண்டு வந்த பாடலை அரசர் முன் சமர்ப்பித்தார். உடனே ஆளனுப்பிப் புலவர்கள் அழைக்கப்பட்டார்கள். வந்தவர்கள், பாரதியார் காலையில் சொன்னபோது விளையாட்டுப் பேச்சாக நினைத்ததுமன்றி, குறைந்தது ஒரு வாரத்திற்குள் யாராலும் எவ்வித நூலும் செய்ய இயலாதென்று நினைத்ததனால் திரும்பத் தாங்கள் வரவில்லை யென்று சொன்னார்கள். அப்போது நமது பாரதியாரின் சிந்து படிக்கப்பட்டது. அது அச்சாகாததால், அநேகர் அதனைக் கேட்டிருக்க மாட்டார்கள். அந்தச் சிந்தைப் படிக்கக் கேட்டவர்கள் ஒரே அபிப்பிராயந்தான் சொன்னார்கள். ரெட்டியார் காவடிச்சிந்து பாமரர் பாட்டுத் தான். ஆனால் பாரதியார் சிந்தோ அதன் சுவைகள் ஒன்றும்

குறையாமல், மிக மேன்மையான ஒரு தமிழ்ப் புலவ ரின் பாட்டு என்று எல்லோரும் நமது பாரதியாரை மெச்சி வாயாரப் புகழ்ந்தார்கள்.

1904-ஆம் வருஷத்தில் பாரதியார் எட்டையபுரம் அரசருடன் சிறிது ஒற்றுமை குறைந்து, ஊரையும் உற்றாரையும் விட்டு வெளியேறக் கருதி, மதுரைக்குச் சென்றார். அங்கே சுமார் மூன்று மாதகாலம் சேதுபதி உயர்தர வித்யாசாலையில் தமிழ்ப் பண்டிதராயிருந்தார். பின்பு சென்னைக்குச் சென்றார். அங்கே 'சுதேசமித்திரன்' உதவிப் பத்திராசிரியராயிருந்ததும் 'பால பாரதம்' 'இந்தியா' முதலிய தேசீய பத்திரிகைகளுக்குத் தானே அதிபரும் ஆசிரியருமாயிருந்து மிகவும் செவ்வைபெற நடத்தித் தமிழ் நாட்டில், தேச உணர்ச்சியையும் ஒரு புது ஆதர்சத்தையும் முதன் முதல் உண்டுபண்ணித் தேசபக்தராய் விளங்கியதும், அதியற்புதமான தேசப் பாட்டுகளை இயற்றி வெளியிட்டுப் புகழ் நிரப்பியதும் யாவரும் அறிந்த விஷயம். ஸ்ரீ சிதம்பரம்பிள்ளையவர்கள் சிறையிடப்பட்டபோது அவர்களுக்கும் கலெக்டருக் கும் நடந்த ஸம்வாதமாகச் சில புதிய கருத்துக்களுடன் கீர்த்தனைகள் இயற்றித் தமிழ் மக்கள் மனதில் தூங்கிய ஒற்றுமை யுணர்ச்சியையும், தேச நேசத்தையும் உயிர்ப் பித்தெழுப்பி உலவச் செய்தது உலகம் அறியும்.

"ஜன்மபூமி" முதலிய வெளியில் வந்த சில பாட் டுக்களேயன்று, அச்சேறாமல், இவர் பாடிப் பயின்று பரவப்பெற்ற பல தேசப்பாட்டுக்களும், தமிழில் ஒரு

புது நடையும், புதிய ஆவேசமும், உருவெடுக்கச் செய்தன. ஆயிரக்கணக்கான இளைஞரும், மாணாக்கரும் இவர் பாட்டுக்களையே பாடத் தலைப்பட்டனர். இவரது தேசாவேச ஓசை தமிழ் நாட்டில் பரவ ஆரம்பித்த போது, தேசபக்தி தமிழ் மக்களாலேயே அவமதிக்கப் பட்டதாயிருந்தது. 1908-ஆம் வருஷம் பிறந்ததும் அரசாங்கத்தாரின் வெறியாட்டின பயனாக, அநேகர் சிறைப்பட நேர்ந்தது கண்டு பாரதியார் தனக்கும் சிறைவாசம் நேருமென்றஞ்சிப் புதுச்சேரிக்குப் போயினர். அங்கே பத்துவருஷம், அரணில்லாது தானே சுமத்திக்கொண்ட சிறையில், விலங்கற்ற கைதியாய், வறுமை, நோய், முதலிய துன்பங்களுக்காளாய் வெளியில் புகழ்பவரன்றி, நெஞ்சில் நேசிப்பாரும் ஆதாரத்துடன் ஆதரிப்பாரும் இன்றிப் பலவாறு வருந்தினர். துன்பம் நிறைந்த இக்காலத்தில் தான் இவர் அளவற்ற நூல்களை இயற்றிக் குவித்து வைத்தார். அவைகளெல்லாம் கையெழுத்துப் பிரதியாகவேயிருந்து வருகின்றன. அவைகளையன்றி, அழகிய வசன நூல்களும், சிறு கதைகளும் பல செய்துள்ளார். இவர் வசனநடை எளிதில் யாரும் உணர ஒழுகுவதுடன், இனிய, எளிய நடையும், வடித்த சுவை நிறைந்தும், யாப்பற்ற கவிகளென்று சொல்லும்படி அதிமாதுர்யமாயிருக்கும். ரவீந்திர நாதரின சிறு கதைகளுக்கு இவர் செய்துள்ள தமிழ் மொழிபெயர்ப்பு படிக்கும்போது, மொழி பெயர்ப்பாய்க் காணாமல், தானே முதனூலும், ரவீந்திரர் ஆங்கிலமே மொழி

பெயர்ப்பாயும் தோன்றும். அத்துணை அழகு பெற்று அமைந்துள்ளது. இவரது "ஞானரத"த்தைப் படித்தவர்களுக்குத் தமிழ் நடையில் இவருக்குள்ள ஆதிக்கமும், நடைச்சிறப்புத்திறமும் இனிது விளங்கும். கடைசியாக, 1918-ஆம் வருஷம், இவர் தாமாகப் புதுச்சேரிக்குப் போனதுபோலவே, அங்கிருந்தும் தாமே வெளியேறினார். எல்லை கடந்ததும், இவரைப் போலீசார் கடலூரில் பிடித்துக் கைதியாக்கினர். ஆனால் யாதொரு குற்றமும், இவர் மேல் வெளியாகாத நிலையில் விரைவில் விடுதலை செய்யப்பட்டு மனைவி மக்களுடன் கடையம் சென்றார். கடையத்திற்கு வந்தது முதலே இவரது உடல் நிலை இவரது நண்பர்களுக்கு மிகுந்த வருத்தத்தை விளைத்தது. இவர் மிக மெலிந்து வலி குறைந்து நைந்த உருவத்தோடு மனவலியும் எய்த்து வருவது நாள்தோறும் சிநேகிதர்களுக்குக் கவலை தந்தது.

இறுதியாக, மறுபடியும், இவர் 1920-ஆம் வருஷத்தில் சென்னைக்குச் சென்று 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு மீண்டும் துணையாசிரியராய் அமர்ந்தார். பத்திரிகைகளில் இவர் பாக்களும், தேசீய வியாசங்களும் அடிக்கடி வெளி வந்ததை அனைவரும் அறிவர். ஆனால், நாள்தோறும் இவர் தேகபலம் குறைந்துகொண்டே வந்து, கடைசியாக, 1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 11௳, சென்னை, திருவல்லிக்கேணியில் இவர் உயிர் துறந்தார். இனி, எவ்விதத்திலும், இவர் உதவி வேண்டாதா ராயினவுடன், அவர் இருக்கும் வரை

அவரை அலக்ஷியஞ் செய்த தமிழுலகம் திடீரென்று அவர் புகழில் மோஹ முற்று மூழ்கியிருக்கிறது.

பாரதியாரின் கவித்திறமும், நடைநலனும் நான் எடுத்து விரிப்பது அநாவசியம். இத்தோடு வெளியாகும் அவரது இனிய பாக்களே அவர் திறமைக்கு இறவாத சான்றாகும். இவருடன் நெருங்கிப் பழகாதவர்கள் இவர் இயற்பெருமையை அறிவது அருமை. இவர் இயற்கையழகிலும் பௌதிக அமைப்புக்களிலும் மிகவும் ஈடுபட்ட மனமுடையவர். சிவந்து மலர்ந்த பொன்பொதிந்த மாலை ஞாயிற்றைக்கண்டு மகிழ்வதிலும், அழகிய மனோஹரமான மலைத்தோற்றங்களில் நெடிது நேரம் தமது மனதை இழந்து அவசமாகி அநுபவித்து நிற்பதைக் கண்டிருக்கிறேன். எல்லா உயிர்களிடத்திலும் ஒப்ப நிரம்பிய இரக்கமுடையவர். சர்வ ஜந்துக்களுக்கும் ஸ்நேகிதர். சமீபத்தில், சென்னையில் யானைக்குப் பழமருத்தப்போய், மிதியுண்டு பலநாள் வருந்தியது பத்திரிகை படிக்கும் பலருக்கும் தெரியும். இவர் தமக்கு சர்வ ஜீவராசிகளோடும், பகையற்ற நேசமுண்டென்று வற்புறுத்தி வாதிக்கக் கேட்டிருக்கிறேன். பாம்பும் புலியும் தன்னைத்த விரிந்த மனஸுடன் நேசிப்பவரைப் பகையாதென்றும், எல்லோரும் இறவாதிருக்க முடியுமென்றும், தேசகால வர்த்தமானங்களால் வேறுபாடு கிடையாதென்றும், உலக முழுவதும் ஒரு குலமேயென்றும, இக்கருத்துக்கள் கேவலம் வ்யவஹார நிலையில் விசாரிக்கப் படுவது பிரயோஜனமில்லை யென்றும், தற்போதத்தால் அவை

களின் உண்மையை அறிந்து அநுபவிப்பதே அறிவுடைமைக்கு அழகென்றும், தன் உற்ற தோழருக்கு ஓயாது உபதேசிப்பார். நமது உபநிஷதங்களில் ஒப்பற்ற நம்பிக்கையும், வியப்பும் கொண்ட இவர் உலகத்திலுள்ள சகல மதங்களிலும், சமதிருஷ்டியும், ஒத்த மதிப்புடையவராயு மிருந்தார். ஜாதி மத பேதங்கள் இவர் அகராதியில் அர்த்தமற்ற சொற்கள். மற்றவர்களைப்போல், ஆசார சீர்திருத்தங்கள் சம்பந்தமாய் கேவலம் புகழுக்காகப் பிரசங்கம் பண்ணித் திரிகிறவரல்ல. எப்போதும் எந்த விஷயத்தையும் ஆழச் சிந்திப்பார். சிந்தித்துக் கண்ட முடிவில் துணிவு கொள்வார். துணிந்தவழி என்றும், யாண்டும், ஒழுக முயல்வார். இதுவே இவரது இயல்பு. சாந்தமும் மோனமும் பெரும்பாலும், இவர் விரும்பிக் கையாண்ட குணங்கள்.

சங்கீதத்திலும் நல்ல ஞானமுள்ளவர். அதனால் இவர் கவிகள் இனிய இசையில் பாட அமைக்கப்பட்டன. இவரது குணங்களில் பலமுறை இவர் அன்பர்களை அலமறச் செய்தது இவர் தன்னல மறதி. பிறர்க்கன்றித் தனக்குழையாத் துறவி இவர். பத்துநாள் பட்டினிக்குப்பின் பத்து ரூபாய் கிடைத்தாலும், பணம் கையிலிருக்கும் பொழுது, குறை சொல்லி இரப்பாரைக்கண்டால், உள்ளதை அப்படியே கொடுத்துவிட்டு, பழம்பட்டினி விரதத்தை சிரமமின்றி மேற்கொள்வர். பெரியோர் சிறியோர் என்ற வேறுபாடின்றி, வருத்தமுறும் யாரிடத்தும் அளவற்ற அனுதாபம் காட்டுவர். கடன் வாங்கியும் பிறர்

நோயகற்ற விரைவார். உள்ள உடைகளையும் கொடுத்து விட்டு, உடுத்த வழியின்றி பல்காலும் இடர்ப்படுவார். பைசாக்கள் முயற்கொம்பா யிருக்கும் பொழுது நூற்றுக்கணக்காகப் பிறர்க்களிக்கப் பரபரப்பார். தன் மனைவி மக்கள் மற்றவர்களை விடத் தன் ஆதரவுக்கு அதிக உரிமையுடையவர்களென்பது இவர் அறியாத பாடம். இந்தக் குண மேலீட்டால் பல அவசரங்களில் இவர் பட்ட பாடுகளை அறிந்த பலரும் இவரைப் பித்தனென்று கூசாமல் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் இவர் தனக்கு மிக அவசியமான சமயத்தில் இவருக்கு உதவக்கடமைப்பட்ட சிலரும் இவர் உதவியால் நலமடைந்த சிலரும் இவரைப் புறக்கணித்து இவர் வருத்த முற்ற போதும் கூட இவர் தன் ஔதாரியத்தையும், தன்னல மறுப்பையும் ஒரு காலும் வெறுத்ததில்லை.

தமிழர் மறந்தாலும், தமிழ் மறவாத இப்புலவர் பெருமான் பாக்கள் என்றும் இறவாது நின்று நிலவும். இவர் மூட்டிய தேச நேச நெருப்பு அவியாது வளர்ந்து தமிழகமுழுவதும், இருளகற்றி, ஒளிரச்செய்து நிற்கும் ஜோதியாய் விட்டது. மஹாமஹோபாத்யாய ஸ்வாமிநாத ஐயரவர்களுக்கு அப்பட்டம் கிடைத்ததற்காக விழவெடுத்த சென்னைச்சபை யொன்றில் என் வேண்டுகோளுக்காக, இவர் உடன் பாடிப் படித்த மறக்கொணக் கவிகளின் கருத்துக்களைக்கொண்டே இவரைத் தமிழகம் அநாதரவு செய்தது இவருக்குக் குறையு

மில்லை; தமிழர்க்குப் புதுமையுமில்லை யென்று சமாதானப்படுத்திக் கொள்கிறேன். புதுச் சிறு விளக்குகளைக் கண்டு அதிசயிக்கும் மாந்தர் செம்பரிதி யொளி கண்டு புகழ்வதில்லை. வெயிலிடுவது பரிதிக்கும், சுவையினால் உயர்வது அமிர்தத்துக்கும் இயற்கையாகி, அவைகள் அந்தந்தக் குணத்தில் ஒப்பற்றுயர்ந் திருப்பதால் ஒருவரும் அதுகண்டு வியப்பதில்லை. சிறிது குறைந்த உயர் வளவில் மட்டே மாந்தர் கண்டு வியந்து, நயப்பது வழக்கம். சாமான்யமாக, பரிசிக்கப் படாமலும், பண்முடையோர் குற்றங்களை மறைத்துப் பொய்யாகப் புகழாமலும் உண்மையில் வாழ்ந்த இவ்வுயர் புலவரை, அளப்பரிய அவர் தலைமைப் புலமைப் பெருமித மிகுதியால் மட்டுமே நம துலகம் அறிய முடியாதாயிற்று போலும்.

பாரதியார் ஏனைப்புலவர் போலாது, புதுமுறைகளையே சிருஷ்டித்தார். தமிழ் மொழியில் பாக்களும் பாவினங்களும் மலிந்து கிடந்தும், அவைகளை விட்டுப் புதுக் கருத்துக்களும், புதிய உணர்ச்சிகளும், மலிந்து விளங்க, அவைகளுக்குப் பொருத்தமான புதிய நடைகளையும் புதியயாப்புக்களையும், உண்டு பண்ணியிருக்கிறார். அநாயாசமாய், இயற்கை யியல்புகளிலிருந்து, உருவங்கள் உண்டு பண்ணிக் கையாளுவதும், எளிய உவமைகளால் பெரிய விஷயங்களை விளக்கத்துணியும் தனித்திறனும், முன்னைய புலவரிடத்தில்லாத இவரது

அரிய குணங்கள். வாய்மை, வீரம், பெண்களைப் பேணல், எளியாரை ஏற்றல், ஓரமில்லா ஒற்றுமை யுணர்ச்சி, ஸ்வதந்திரம் முதலிய இவர் பாராட்டிப் பாடிய பல குணங்களும், இவருக்கு இயல்பானவை. இவையெல்லாம் இவர் பாக்களில் இனிது காணலாம். இவரது "கண்ணன்பாட்"டையும் "பாஞ்சாலி சபத"த்தையும் படித்தவர்களுக்கு, இவரது குணங்களும் திறமையும் விசதமாகும். இவரை உள்ளபடி அறிய விரும்புவோர்க்கு இவர் கவிகளைவிடச் சிறந்த கருவி கிடையாது. ஆதலால், இவர் நூல்களைப் படித்து, நடு நிலையில் சிந்திப்பார்க்கு உள்ளத்தனையதிவர் உயர்வு என்பது தெளிவாகும்.

(தூத்துக்குடி, துன்மதி-மார்கழி.)

பாரதியைப் பற்றி

# வி. சக்கரைச் செட்டியார்.

## ராஜீய வாழ்வு

"அவன் இறந்தனன்; எனினும் தன் வைராக்கியமதனுல் அவன் நம்முடன் இன்னமும் உரையாடி வருகிருன்."

—விவிலியம்.

ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார், தமிழ் மறு மலர்ச்சியினை (Renaissance) முன் கொண்டு கட்டியங் கூறிய பெருமான், எழுச்சிமிக்க தேசீய கவி இறந்துவிட்டார்; ஆயினும் காலாந்தகாரத்துள் மறைந்த வீர புருஷர்களைபபோன்று, அவர் தமது கவிதைகளின் குழலிசையால் இன்னமும் நம்மோடு உரையாடியவரா யிருக்கின்ருர். அவர் என்று மழியாப் புகழுக்கு உரிமைபெற்றிருப்பது, அவர் தம் வாழ்வில் ஒரு சம

யம் பல ராஜீய சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருந்த போதிலும் அவை காரணம்பற்றியோ, அதிகார வர்க்கத்தினரோடு சேர்ந்துகொண்டோ அவருக்குக் கீழ்ப்பட்டோ ராஜீய மகாநாடுகளிலும், கமிட்டிகளிலும் பிரதம ஸ்தானங்கள் ஏற்றிருந்தாரென்பது பற்றியோ அல்ல; ஆனால் அவரது ஓய்விலா ஊக்க உணர்ச்சி அவர் தமிழ் நாட்டிற் களித்துள்ள இன்னிசைக் கீதங்களுள் என்றுளும் தகதகவெனத் ததும்பி நிற்கின்ற தன்மையால் தான் ஆகும். நான் ஒரு தமிழ் வள்ளுவனல்ல; ஆகவே, அவரது கவிதையைப்பற்றி இலக்கிய மதிப்புரைவதற்கு நான் திறனுடையேனு எனுங் கேள்விக்கு இடமுண்டாகும். எனினும், பாரதியாரின் உயிர்த்துணைவியால் அவரது சென்னை வாழ்க்கையைப் பற்றிய எனது சில ஞாபகங்களை வெளியிட அழைப்புப் பெற்றமையின், அதனை நான் ஓர் பெரும் பாக்கியமாகக் கொள்வதன்றி, அவருடன் எனது இறந்த கால உறவினின்று நான் சேகரிக்கக் கூடிய நட்பின் மலர்களால் அவரது சமாதியை அலங்கரித்தல் அந்நண்பரது ஞாபகார்த்தமாக நான் செய்யவேண்டியதோர் தலைமையான கடமை யென்றுங் கொள்கிறேன்.

ஆங்கில கவி உவிலியம் வோர்ட்ஸ்வொர்த் (William Wordsworth) என்பவர் "பிரெஞ்சு ராஜீய புரட்சியின் சமயம் இளமையுற்றிருந்தோர் சொர்க்க போகமே பெற்றவரானர்" என்று கூறுகி

ரூர். அவ்வணந்தான் யுவகர்களாகிய நாங்கள் உணர்ந்தோம். இந்தியர் விடுதலை யென்னும் காலை ஞாயிற்றின் கிரணங்களை நாங்கள் கண்டுகொண்டோம். ஆனால், அது சமயம் நாங்கள் ஓர் புண்ணிய நதியின் கரையில் ஓங்கி யெழுங்கதிரவனைக் கவர்ச்சி மிகுந்து மேனோக்கிய வாடின முகத்துடன் தரிசித்து நிற்கும் பக்தர்களைப் போன்றிருந்தோம் என்னலாம். கர்ஸன்பிரபு வங்காளப் பிரிவினை யியற்றிய போதும் ஸ்ரீ சுரேந்திரநாத் பானர்ஜீ தமது இனிமையான குரலில் செய்த சட்ட ரீதியான கண்டனங்களெல்லாம் விழலுக்கிறைத்த நீராகிய போதும் நாங்கள் உணர்ந்த இருளை மையிருள் என்றே சொல்லவேண்டும். அடிமைத் தன்மையின் மனச்சோர்வும் சட்ட ரீதியான இயக்கமெனப்படுவதன் பயனின்மையும் எங்கள் மனதை முறித்துவிட்டன வென்றாலும், உடன் புதியஊக்கத்தையும் எழுப்பியன. காசியில் 1905ஆம் ஆண்டில் நடந்த காங்கிரஸிலும், பின்னர் 1906ஆம் ஆண்டில் தாதாபாயின் தலைமையில் நடந்த காங்கிரஸிலும் எங்களது போர் ஆரம்பிக்கப் பட்டது. இந்தப் போராட்டத்தின் பயனாக லோகமான்ய திலகரை முக்கியமான தலைவருள் ஒருவராகக்கொண்டு புதியகட்சி எழுந்தது. சென்னையில் இந்திய விடுதலை இயக்கத்தின் கொடியின் கீழ் பிரபலமாக வந்த யுவகர்களுள் பாரதியாரே கவித்துவம் படைத்தவராயிருந்தார். இன்று பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்னரும் அவரைப்பற்றிய எனது ஞாபகங்கள் இன்றே நடந்த

தைப்போலச் செம்மையாக இருக்கின்றன. பாரதியார் பேச்சில் சங்கோசமும், கண்களில் ஒளியும், அபிநயங்களில் சிரத்தையின்மையும் கொண்டவர்; அவர் வாக்கியங்களை மிகத்துணிவுடனும், தாட்சண்யமின்றியும் வெளியிடுவார். அவர் உலகில் வதிபவரெனினும் அவரை இவ்வுலகத்தவரென்று கூறல் பொருந்தாது. ஏனெனில், இவ்வுலகின் நிலையற்ற சுகபோகங்களுக்கு ஆசைகொண்டிருப்பின் அவர் அதிக மனோரம்மியமான ஸ்தானங்களில் அமர்ந்திருக்கக்கூடும்; பிற்காலத்தில் அவருக்கேற்பட விருந்த துரதிருஷ்டங்களெல்லாம் நடைபெறுமலிருந்திருக்கக் கூடும்.

அவரோ, நாளையைப் பற்றிய கவலை கொண்டவரல்ல; ஜனங்களுடைய ஆமோதிப்பையும் கோரியவரல்ல. பிரதானமாக அவரை வீரர் புகழ் பாடுங் கவி (Lyrical Poet) யென்றே சொல்லவேண்டும். காலவித்தியாசமின்றேல் அவர் புறநானூறு எழுதிய கவிகள் தமிழ் வேந்தரின் சமஸ்தானங்களில் பெற்ற புகழும் பொருளும் பெற்றிருக்கக்கூடும். ஆனால் அவரோ ஓர் துர்பிட்சகாலத்தில் வாழ நேர்ந்தமையின் அவர் தனது தாய் நாட்டின் வீழ்ச்சியைப் பற்றியும் புதிய கட்சியின் அவா அச்சங்களைப் பற்றியும் பாடினர்.

1904–ஆம் ஆண்டில் அவர் சென்னை சேர்ந்து புகழ் பெற்ற தலைவரும் பழந்தேசாபிமானியுமான சொர்க்

வாசி ஸ்ரீயுத. ஜீ. சுப்பிரமணிய ஐயரின் கீழ் உப ஆசிரியராக 'சுதேசமித்திரன்' பத்திரிகாலயத்திலிருந்து ராஜீய ஞானத்தில் பயிற்சியடைந்தார். அந்தோ! புதிய கட்சியேற்பட்டபோது, அவர் ஒருவரே பழைய ராஜீய வாதிகளுள் கடைசிவரை உறுதியுடன் நின்றவர். அவர்பால் தீவிரமும் ஊக்கமும், ஆவேசமும் தகப்பன் பால் அடைவதுபோல் போயடைந்தன. சென்னையிலே மிகக் கூர்த்தமதியினரெனப் பெயர் படைத்த வக்கீல் ஒருவர் வெகுண்ட போதிலும், சென்னை மிதவாதிகள் எங்கு எங்களோடு சேர்ந்து (ராஜீயத்) தீட்டுப்பட்டு விடுமோ யென்று ஆடைகளைத் தூக்கிக் கொண்டு விலகி நின்றபோதிலும், பாரதியார் எங்களை மேலே நடத்திச் சென்றார். பாரதியாருடன் எனது நட்பு 1907-ஆம் ஆண்டு துவக்கத்தில் துவங்கியது. அப்போது ஸ்ரீ விபின சந்திரபாலர் கலவரமான காங்கிரஸ் முடிவெய்தியதும் சென்னை வந்து புதிய கட்சியின் சித்தாந்தத்தை வியாக்கியானஞ் செய்து கம்பீரமான பிரசங்கங்கள் புரிந்தார். அச்சமயம் சில யௌவனர்கள் சேர்ந்து சென்னை ஜனசங்கமென்ற பெயருடன் ஒரு ராஜீய சபை ஏற்படுத்தினர். இந்த யுவகர்களின் கூட்டத்தை ஸ்ரீயுத ஸ்ரீ. சுப்பிரமணிய அய்யரும், டாக்டர். நஞ்சுண்டராயரும் உத்ஸாகப்படுத்தி வந்தனர். இவர்களே ஸ்ரீயுத பாலரை வரவழைத்தனர். பாரதியார் பாலர் பெஜவாடாவில் பிரசங்கம் புரிந்து வருகையில் சென்னைக்கு யௌவன தேசீயவாதிகளின் பெயரால்

வரக்கோர எங்களால் அனுப்பப்பட்டார். அவரது சென்னை விஜயம் இந்திய சரித்திரத்திலேயே ஓர் பெரிய சம்பவமெனலாம்; இன்றுளைய தேசிய வாதத்திற்கு அதுவே அடிகோலியதென்று கூறவேண்டும். இதனைப் பெயர்போன ரௌலட் கமிட்டியும் உணர்ந்து கொண்டு, இம்மாகாணத்தில் கண்ட அராஜகச் செயல்களுக்கு ஸ்ரீ பாலரின் விஷமஞ் செய்யத் தூண்டுவதெனப்பட்ட பிரசங்கங்களே என்று கூறியிருக்கிறது.

அச்சமயம் இனி வருங்காலம் அதிக நற்காலமேயென்று எதிர்ப் பார்க்க இடந் தருவதாய் நிற்க, இருந்தாற்போலிருந்து ஸ்ரீ பாலர் இங்கு பிரசங்கம் புரிந்து வருகையில் அந்தரத்து இடி இடித்து அடிவயிற்றில் விழுந்தது என்னும்படி ஆயிற்று லாலா லஜபதியும் அஜித சிங்கமும் பாஞ்சாலத்தினின்று நாடு கடத்தப்பட்டது. இது ஒழுங்குப்பாடான அடக்கு முறையை மேற் கொண்ட கவர்ன்மென்டின் முதல் பிரயோக மென்னலாம். விபின பாபு சாட்சியங் கொடுக்க மறுத்ததற்காக சிறைக்கு அனுப்பப்பட்டார். அடுத்த டிசம்பரில் சூரத்தில் அந்த துரதிருஷ்ட மிக்க காங்கிரஸ் கூடியபோது வங்காளத்தில் அராஜகக்காரர்கள் முதல் வேட்டு சுட்டு முடித்தனர். பாரதியாரும் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையும் உள்ளடங்கிய சென்னை யுவகர் கூட்டமொன்று சூரத்திற்குச் சென்றது. மிகக் கலவரத்துடன் அக்காங்கிரஸ் கலைந்தது. ஆயினும் ஸ்ரீயுத பாரதியார் எங்கள் துயர் ஆற்ற தமது கீதங்க

ளைப்பாடி விகடமும் புரிந்தார். காங்கிரஸில் மிதவாதி களின் கை மேலானது அடக்குமுறையும் சிறையிடுத லும் புதிய உருபெற்றெழுவதற்கு முன் குறியாயிற்று. 1908-ஆம்ஆண்டில் திருநெல்வேலிக்குழப்பம்நடந்தது. ஸ்ரீ சிதம்பரம் பிள்ளையும் ஸ்ரீ சுப்பிரமணிய சிவமும் கைது செய்யப்பட்டனர். பாரதியார் திருநெல்வேலிக் கோர்டில் சாட்சியம் கொடுக்கச் சென்றார். இதைத் தொடர்ந்து விரைவில், ஸ்ரீ சுரேந்திரநாத் ஆரியா சென்னை மூர் மார்க்கட்டில் ராஜ துவேஷமூட்டுவ தென்று கூறப்பட்ட பிரசங்கங்களைப் புரிந்ததற்காக, செஷன்ஸ் கோர்ட்டில் விசாரிக்கப்பட்டு தண்டனை பெற்றார்.

இச்சம்பவங்களுக்கு ஈராண்டு முன்னர், அதாவது 1906ல், இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ் (India Printing Works) என்னும் இந்தியா அச்சி யந்திரச்சாலை, திரு வல்லிக்கேணி ஸ்ரீ திருமலாசாரியாரால் ஆரம்பிக்கப் பட்டது; ஸ்ரீ பாரதியார் 'இந்தியா' வெனும் பெயர் பூண்ட புதிய தமிழ் வாரப் பத்திரிகைக்கு ஆசிரியரா னார். அஃது அவரது விசேஷமான வன்மைபொருந்திய நடையில் புதிய தேசீயவாதத்தின் கட்சியை எதிரொ லித்து வந்தது.

1908-ல் 'இந்தியா'வின் பிரசுரகர்த்தர் ராஜ துவேஷத்திற்காகக் கைது செய்யப்பட்டார். 'இந்தியா' நின்றுவிட்டது. பாரதியாரின் ஆவேசத்தின் கீழ் அல்பாயு சேயெனினும் அதியற்புதமான பிரகாசத்து

டன் அப்பத்திரிகை விளங்கி யொடுங்கிய தென்ன வேண்டும். புதுவைநகர் பாரதியாரைக்கைவிரித்துவர வேற்றது; பாரதியாரும் அதனிடம் அடைக்கலமானார். அப்பிரஞ்சுப் பிரதேசத்தில் அவரது நீண்டவாசத்தை விவரிப்பது என்றால் கூடாது; அப்புதுவை பாரதியாருக்குப் புதுமை கழிய பெருஞ் சிறை யெனவே தோற்றலாயிற்று. தமது பழைய இடங்களையும் தோழர்களையும் மீட்டும் சேரவேண்டுமென்ற அடங்கா ஆவலெழவும் அதிகாரி வர்க்கத்தின் பிடிவாதத்தை இளக்க முயற்சிகள் செய்தார். ஸ்ரீயுத (சேலம்) பி. வி. நரசிம்ம ஐயர் சிதம்பர ரகசியம் போல் இருந்துவந்த கவர்ன்மென்டாரின் உள்ளக்கிடக்கையை வெளியாக்கச் சட்டசபையில் ஒரு கேள்விமூலம் முயன்றார். வழக்கம்போல் அதற்கு சாமர்த்தியமாக மழுப்பிய விடையே கிடைத்தது. 1918ல் பாரதியார் சென்னை திரும்பினார். ஆனால் அவர் தன்னைச் சுற்றி நின்ற காட்சி ஓர் புதிய உலகாகவே மாறி நிற்கக்கண்டார். பழைய தேசீய உணர்ச்சியின் ஜுவாலை லோகமான்ய திலகர்பால் பிரகாசித்து நின்றது. ஹோம் ரூல் கிளர்ச்சியின் தலைவராயும் 1917-ம் வருஷத்திய கல்கத்தா காங்கிரஸின் அக்ராசனராகவும் ஸ்ரீமதி பெஸன்ட் செலுத்தி வந்த செல்வாக்கு தேய்ந்து வரலாயிற்று. மிஸ்டர் மாண்டேகு விஜயஞ் செய்ததும், அவர் அடுத்தபடியாக மாண்ட் போர்டு ரிபோர்டில் கர்டிஸின் தந்திரத்தை நுழைத்ததும், காங்கிரஸ்காரர்களிடை பிளவுண்டாக்கவுற்றனவாயின. புதுவையினின்று பாரதியார் திரும்பியதும்

நான் அவரைச் சந்தித்த போது தாம் விவிலிய வேத (Bible) த்தை நூதன முறையில் மொழிபெயர்க்க உத்தேசித்திருப்பதாகக் கூறினார். அப்பணிக்குஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் முதலான வேறு தமிழறிஞர்களுடன் நமது பாரதியாரும் பெரிதும் யோக்யதை படைத்தவரென்று கூறுவேன். அவர் மட்டும் இன்னும் சிலகாலம் உயிரோடிருந்திருப்பின், அத்தகைய ஓர் பணியை தேசீய உணர்ச்சியுள்ள இந்திய கிருஸ்துவர்கள் அவர்பால் ஒப்புவித்திருப்பார்களென்பதில் ஐயமில்லை. அன்றி, அவர் தமிழ் மொழியின் அழகுக்கும் தமது பாண்டித்தியத்திற்கும் பொருந்தியவாறு மொழிபெயர்ப்புச் செய்திருப்பாரென்ற நம்பிக்கை எனக்குண்டு. பாரதியாரின் கடைசித் தோற்றம் கடற்கரையில் நடந்த ஓர் ஒத்துழையாமைக் கூட்டத்திலாகும். அவரைத்தமது பாடல்களொன்றைப் பாடும்படி ஜனங்கள் கேட்டபோது முதல்பாகத்தில் 60-ஆவது பக்கத்தில் உள்ள "பாரத ஸமுதாயம்" என்ற பாடலைப் பாடினார். அப்பாடல் துணிவான கருத்தும், உயர்ந்த மனயெழுச்சியும் பொருந்தியதாகும். அதில் பின் வரும் அடிகள் என மனதை மிக மிக இளக்கின:—

இனியொருவிதி செய்வோம் அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்

வாழ்க பாரதசமுதாயம்

பின்னர் அவர் நோயுற்றார். 1921ஆ செப்டம்பர் 11தேதி இருள்மிகுந்த இவ்வுலகினின்று உண்மையும் ஒளியும் நிலவும் உலகில் ஏகினார். ஆங்கு அவரது பிறவியின் அரிய ஆதர்சம் மஹோன்னதமாய் சபலமடையுமென நம்புகிறேன். மயானத்தில் நான் அவரது உடலத்தைக் கேவலம் ஓர் எலும்புக் கூடாகவும் தீக்கிரையாவதையும் கண்டேன். ஆயினும் ஒருகால் அஃது அவரது எழுச்சி மிகுந்த ஆத்மாவுக்குற்ற கருவியாக இருந்ததன்றோ? ஆனால், இந்த மாமிசத் தோற்றம் அழிவதே யாகும். ஆத்மாவோ அழிவின்றி விளங்குவதாகும். அதிர்ஷ்ட லக்ஷ்மியின் வலைக்கும் அகங்காரிகளுடைய ஏளனத்திற்கும் உட்படாமல் விலகி நிற்பது அதுவே.

அந்நாட்களில் அவர் கடற்கரையில் ஜனக்கூட்டத்தின் முன் நின்று பாடிய அநேக சந்தர்ப்பங்கள் இது போழ்தும் என் நினைவிற்கு வருகின்றன. எனக்குச் சரியான தேதி ஞாபகத்திற்கு வரவில்லை—கடற்கரையில் பல்லாயிரம் ஜனங்கள் சேர்ந்த பொதுக்கூட்டமொன்று நடந்தது. ஸ்ரீயுத ஜீ. சுப்பிரமண்ய ஐயர் தலைமை வகித்தார். மிஸ்டர் நெவின்சன் என்ற ஆங்கிலப் பத்திரிகைக்காரரும் வந்திருந்தார். ஸ்ரீயுத பாரதியாரும் அச்சமயம் பாடினார். அவ்வாங்கிலேயன் "இந்தியாவில் நூதன உணர்ச்சி" என்ற தன் நூலில் பின்வருமாறு பாரதியாரை வர்ணிக்கின்றான்:-

அந்த சென்னையின் தமிழ்க்கவி லசபதிராய் தேச பிரஷ்டஞ் செய்யப்பட்ட போது தாம் எழுதிய புலம்பலைப் பாடினார். அது தேசப்பிரஷ்டம் செய்யப் பட்டவர்களுக்கெல்லாம் பொதுவான புலம்பலென்னலாம். வீட்டைப்பற்றிய இன்ப நினைவுகள், சிறுவயதில் விளையாடிய நாட்டினிடம் ஆழ்ந்த பற்று, அன்னியர்களிடையும் விளங்காத பாஷைகளிடையும் வாழ்க்கையின் ஏகாந்தமான தன்மை இவையெல்லாம் வெகு சாந்தமுடனும், எளிதாகவும் சொல்லப்பட்டிருந்தன. பின்னர் திடீரென்று மாறி அக்கவி ஏளனஞ் செய்யப் புகுந்து சுயராஜ்யம் (அல்லது ஹோமரூலைப்) பற்றி மிஸ்டர் மார்லிக்கும் இந்தியாவுக்கு மிடை ஓர் சம்பாஷணையை விவரிக்கத் தொடங்கினார்.

* * * *

அதற்கு இந்தியா அழுத்தமாகவும், கம்பீரமாகவும் விடைகொடுத்து வருகிறது. இந்தியத்தாய் சுதந்திரத்தின் உருசி கண்டு கொண்டாள்; இங்கிலாந்திடமிருந்தே சுதந்திரமென்பது யாது என்பதை உணர்ந்து கொண்டு விட்டாள்; ஜான் மார்லியும் அவளுக்குக் குருவாகினாரென்று கூறவேண்டும். அவள் சுயராஜ்யத்திற்கெனத் தொடர்ந்து போராடுவாள். மற்ற தேசத்தினர் அடைந்த உரிமைகளையே அவளும் கோருகிறாள்; அவ்வுரிமைகளுக்குத்தானே இங்கிலாந்தும் போராடியிருக்கிறது. அதே தனிப்பட்ட சுதந்தரத்தையும் (Freedom of person) வாக்குச் சுதந்தரத்தையுந்தான் அவ்விந்தியத் தாய் உரிமை

பாராட்டுகிறாள். எனவே அவள் சுயராஜ்யத்திற்குப் பாடுபட ஒரு கணமும் சோம்பியிராள். வட கோடி முதல் தென் கோடி வரை அவளது புத்திரர்கள் ஒற்றுமைப் பட்டு வருகிறார்கள்; கிழக்கினின்றும் மேற்கு வரை 'வந்தே மாதரம்' என்ற கோஷம் வானத்தை அளாவி நிற்கிறது. மெதுவாக சுதந்திர சூரியன் உதயமாகி வருகிறான்; அவன் தாமசமாக எழினும் இந்தியா சுயராஜ்யத்திற்கென இடைவிடாது உழைத்துவருமென்பதில் ஐயமில்லை.

காலஞ்சென்ற ஸ்ரீயுத-வி. கிருஷ்ணசாமி ஐயரும் கூட ராஜீய அபிப்பிராயங்களில் நாங்களும் அவரும் இருதுருவங்களைப் போலும் ஒட்டாது நின்றாலும் பாரதியாரின் பாடல்களால் பரவசமானார். அன்றி, அவரது பெயர் பெற்ற பாடல்களுள் சிலவற்றை சிறு புத்தகவளவில் ஆயிரக்கணக்காக அச்சிட்டு இனமாக விநியோகிக்கச் செய்தார். பாரதியாரது கவிதையின் உருக்கந்தான் ஓர் ராஜீய எதிரியிடமும் இந்தப் புகழ்ச்சியை வெளியாக்கியது.

இரண்டு விசேஷ சந்தர்ப்பங்களில் ஸ்ரீமான் பாரதியாரும் நானும் மற்றவரும் மேற்கொண்ட காரியங்கள் நுண்ணறிவுடைய மிதவாதிகளால் போக்கிரித்தன மென்று எப்போதும் கண்டிக்கப்பட்டு வந்திருக்கின்றன. என்றாலும், அவை எனது அபிப்பிராயத்தில் யுவகரிடம் எப்போதும் காணும் உத்சாகத்திற்கு சிறப்பானவைகளே யாகும். நிற்க.

இது போழ்து பாரதியாரின் பாடல்களை நால்வரின் பாடல்களைப் போல் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் பாடும்படி செய்வித்தல் எப்போதும் நல்ல பாடல்களைப் போற்றுவதான தமிழ் நாட்டின் கடமையாகும். இந்தப் பாடற் றொகுதிகளை வெளிவரும் போதே அவற்றை ஆயிரக்கணக்காக தமிழ் படிக்கும் ஜனங்கள் வாங்க வேண்டும். பாரதியாருக்குத் தமது பாடல்களை ஆடவரும் பெண்டிரும் குழந்தைகளும் எளிய வீடுகளிலும், பணக்காரர் மாளிகைகளிலும், ராஜீய மேடைகளிலும் நிம்மதி நிலவும் இல்லங்களுமட பாடக் கேட்பதன்றி வேறொன்றும் மனச்சாந்தி உண்டாக்கக் கூடியதல்ல. என் நாட்டவரே! இந்திய நாட்டையும் தமிழ் மொழியையும் போற்றுபவரே! பாரதியாரின் ஞாபகார்த்தமாக எனது இச்சிறு மாலையைச் சமர்ப்பித் திருக்கிறேன். நான் செய்வீர்களென்று நம்புகிறபடி நீவிர் உங்கள் கடமையைச் செய்வீர்களா ?

(எழும்பூர், 1—3—32)

# பரலி சு. நெல்லையப்பர்

## பாரதியார் தமிழ்ப்புலமை

காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியார் தன்னிகரற்ற தமிழ்ப்புலவர். நமக்கு அணுகிய காலத்தாராகவே, இவர் கவிநலத்தினுயர்வை உள்ளபடி அளந்தறிவதருமையாகும். வெறுப்பவரும் நயப்பவரும் நடுநிலையின்றி இவரியல்புகளைக் கடையிறந்து காண்பாராவர். நங்கால நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு, நவீன ஆதர்சத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு நம்மிடையே பாடும் நங்காலப்புலவ ரொருவரின் கவிகளை மிதமிஞ்சிப் புகழ்வாரும், வெறுத்து மிகப் பழிப்பவரும் பலராவர். ஆனால் இத்தகைய புலவரின் கவிகளை, கவி நல மறிவதன்றிப் பிறிது நோக்கங் கொள்ளாது, தம்முணர்வு கவரவிடாது படிப்பதும் படித்தவற்றினியல்பளந் தறிவதும் மிகச் சிலர்க்கே யாவதாகும். நடுமை நல்லறிவாளர் பாரதியார் கவித்திறமறிந்து கூறும் நயவுரைகள்காணும்வரை, மற்றவர் இப்புலவர் கவிதை நலங் காணமுயல்வது தவறென்பது சாலாதன்றோ? ஆனவரை இத் தமிழ்ப புலவர் கவி நலத்தை யாராய்வேன். முற்றத்துணிந்த முடிவுகாண வல்ல முதுக்குறைவுக் குரிமை கேளேன். எனினும் இயன்றவரை பொறுமையோடு பாரதியாரின் கவித்திறத்தை யாராய்ந்து கண்டமுடிபுகளை வெளியிடுவதால், மற்றைத்தகவுடைய பெரியாருண்மைக் கருத்துக்களை வெளியிடச் செய்யவும் கூடுமாதலால் இம் முயற்சியிலொரு சிறிது தலையிடத் துணிந்தேன்.

முதலில், தற்காலத் தமிழ்ப்புலவர் சங்கேதங்களுக்கு, பாரதியார் பெரும்பாலும் புறப்புறச் சமயியாவர். நாகபந்தங்களும் ஏகத்தாளிகழுகல் எமகவந்தாதிகளும், புலமைத்தலைக்கோலாக்கருதும் பாவலரிடையில், சித்திரகவிச் சத்துருவான பாரதியார் பாக்கள் மதிக்கப்படுவதருமையேயாகும். மனோபாவ வறுமையோடு, பொருளும் வறண்ட தற்காலப் புலமைவனம், அழகொடு மணஞ்செயு மலர்களேனும், கொழுவிய தண்சுவைக் கனிகளேனும் தரவொண்ணாது அடர்ந்திருண்டுகொழித்துமலிந்த இலைச்செடி களானும் புதர்களானுமே நிறைந்து தோன்றுவதியல்பாகும். தற்காலம் தழைகளே தழைவதாகவே, மணமற்ற தழைமாலைகளே பெரும்பாலுமிடையப் படுகின்றன. அழகு மண முதலிய இயற்கை நலமில்லாதாகவே, தழைகளை வினைத்திற மலியப் பலவாறு தொடுத்து அடுக்காலுந் தொடையாலும் பல்வேறுபட்ட இலைமாலைகளையே பலரும் மிடையலாவர். இவ்வனத்திடையே தளரா ஊக்கமுடையானொரு புலவன், வெறுஞ் செடி களைந்து, நிலந்திருத்தி, உணர்வு நீர் வார்த்து உரன்கதிரூட்டி வளர்த்த நல்ல தமிழ்ப் பூந்தோட்டத்தில் நறுமலருஞ் சுவைக்கனியுங் காணப்பெற்றால் அஃது அவ்வனத்தியல்புக்குப் பொருத்தமற்றஅபூத விளைவாகவேதோன்றும். பாரதியார்பாக்கள் இவ் இலைவனததிடை எழுந்த கனி மலர்த் தோப்பாம்.

# மதிப்புரை

செந்தமிழ் நாட்டிலே தோன்றிச் சிறந்த பாடல் களினால் தாய்நாட்டுக்குப் புத்துயி ரளித்த தற்காலப் பெரு மக்களில் காலஞ் சென்ற சுப்பிரமணிய பாரதி யார் ஒப்பற்றவ ராவர். சென்ற சில ஆண்டுகளுக் கிடையில் தமிழ் மொழியில் உயிருள்ள பாடல்கள் பாடிய ஒப்பற்ற புலவர் பாரதியார் ஒருவரென்றே சொல்லவேண்டும். தமிழ் உலகத்திலே பாரதியார் ஒரு மின்னல் போலத் தோன்றி மறைந்தார்.

காலஞ் சென்ற சுப்பிரமணிய பாரதியார் 1882ஆம் வருஷம் நவம்பர் மாதம் பிறந்தார். அவர் சரித்தி ரத்தை அவருடன் இளமை முதல் பழகிய அறிஞர் சோமசுந்தர பாரதியாரின் எழுததால் அறியலாம். ஆனால் பாரதியாரது பூரணமான ஜீவிய சரித்திரம் இனித்தான் வெளியாதல் வேண்டும்.

1906 அல்லது 1907ஆம் ஆண்டா யிருக்கலாம். வங்காளத்தில் சுதேசியக் கிளர்ச்சி மும்மரமா யிருந்த பொழுது, தென்னாட்டில் சுதேசிய ஊக்கம் உச்ச நிலையி லிருந்த காலத்தில், தூத்துக்குடியில் ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளை, சுப்ரமண்யசிவம் முதலியவர்கள் மீது வழக்கு ஏற்பட்டபொழுது ஸ்ரீமான் பிள்ளையவர் கள் வீட்டில் ஒரு நாள் மாலையில், நான் பாரதியாரை முதல் முதலாகக் கண்டேன்.

அப்பொழுது நான் அவர் பெயரைக்கூடக் கேள்விப்பட்டிருக்கவில்லை. என்னுடன் நெடுநாள் பழகிய ஒருவர் போல அவர் எனது கையைப் பிடித்து இழுத்து உலாவுவதற்காக அழைத்துச் சென்றார். அன்றுதான் அவர் திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடிக்கு வந்திருந்தார். ஊருக்குப் புதிது. வெளியே உலாவுவதற்காக என்னைத் துணையாக அழைத்துச் சென்றார். அப்பொழுது அவர் சென்னையில் நடந்த "இந்தியா"ப் பத்திரிகைக்கு ஆசிரியரா யிருந்தார். கம்பீரமான பேச்சு. குதூகலமான நடை. குங்குமப் பொட்டு. ஓயாது பாடும் வாய். ரோஜா நிறப் பட்டு அங்கவஸ்திரம். இவற்றை நான் என்றும் மறக்க முடியாது.

பாரதியார் பாடிய

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மானிலத் தாயை வணங்குதும் என்போம்

எந்தையுந் தாயும் மகிழ்ந்து குலாவி
யிருந்ததும் இந் நாடே.

என்ற தொடக்கத்து இரண்டு பாடல்களையும் காலஞ்சென்ற சென்னைப் பெரியாரான வி. கிருஷ்ணசாமி ஐயர் ஆயிரக் கணக்காக அச்சிட்டுப் பள்ளிப் பிள்ளைகளுக்குக் கொடுக்குமாறு ஏற்பாடு செய்திருந்தார். இந்தத் துண்டுப் பிரசுரங்களும், பாரதியார் 'சுதேச கீத'ப் புத்தகங்களும் சிதம்பரம் பிள்ளை யவர்கள்

வீட்டில் ஏராளமாகக் கிடந்தன. இவற்றைப் படித்த பின்னரே அவற்றின் ஆசிரியர் பெருமையை ஒரு வாறு உணர்ந்தேன். நான் அது வரை படித்திருந்த பல பாடல்களிலும் காணாத புதுமையைப் பாரதியார் பாடலில் கண்டேன். அக்காலத்தில் மக்கள் உள்ளத்தில் தோன்றிப் பொங்கி யெழுந்த தேசபக்தி வெள்ளமே பாரதியாரின் சுதேச கீதமாக வெளியாயிற்றென்று சொல்லலாம்.

பின்னர் சுமார் மூன்று ஆண்டுகள் சென்ற பின்னர், தேசபக்தர்களுக்கு அடைக்கலமாக விளங்கிய புதுச்சேரியில் கலவை பங்களாவில், நான் பாரதியாரை இரண்டாவது முறையாகச் சந்தித்தேன். அப்பொழுது பாரதியாரை ஆசிரியராகப் பெற்றிருந்த 'சூரியோதயம்' என்ற வாரப் பத்திரிகையில் உபபத்திராசிரியராக இருக்குமாறு நான் அங்கே சென்றிருந்தேன். பாரதியார் அப்பொழுது பார்த்தபொழுது என்னை அவர் கூர்மையாக உற்று நோக்கினார். ஊக்கமற்று, உணர்ச்சியற்று, உயிரற்று அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழ் நாட்டிலிருந்து வரும் இவனிடம் ஏதேனும் உணர்ச்சி ஊக்கம், உயிர் இருக்கிறதா என்று அவர் சிந்தித்தது போலத் தோன்றியது. நான் புதுவையில் இருந்தகாலத்தில் பாதி நாள் இராக்காலத்தை பாரதியாருடனேயே கழித்தேன். அப்பொழுது பாரதியார் வறுமையில் வாழ்ந்திருந்த போதிலும், வந்தவர்களுக்கெல்லாம் அவர் வீடு சத்திரமாகவே விளங்கியது.

புதுவையில் அவர் வறுமையிலேதான் வாழ்ந்திருந்தார். ஆயினும் எல்லோரையும் வருத்தும் வறுமை அவர் உள்ளத்தை வருத்தவில்லை. இரவெல்லாம் அவர் பாடிக்கொண்டு ஆனந்தக்களிப்பிலே யிருப்பார். தாயுமானவர் பராபரக் கண்ணியை அவர் ஓயாமல் பாடுவார். அவர் பேச்செல்லாம் தேசப் பேச்சாயும் தெய்வப் பேச்சாயுமே இருந்தன. இயற்கைக் காட்சியில் அவர் பெரிதும் ஈடுபட்டிருந்தார். அதிகாலையில் அவர் புதுவை நகரிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்திலுள்ளமடுவுக்கு நீராடச்செல்வார். அப்பொழுது பூபாள ராகத்தில் திருப்பள்ளியெழுச்சி பாடிக்கொண்டு செல்வார்.

பொழுது புலர்ந்தது
யாம் செய்த தவத்தால்

என்ற தொடக்கத்து ஐந்து பாடல்களடங்கிய பாரத மாதா திருப்பள்ளி எழுச்சியைப் பாடிய பொழுது நான் அவருடன் இருந்தேன். அல்லும் பகலும் அவர் தெய்வ சிந்தனையிலும் தேச சிந்தனையிலுமே ஈடுபட்டிருந்தார். சுதேச கீதங்களில் ஒரு பகுதியைத் தவிர்த்துப் பாரதியார் பாடல்களிலும், எழுத்துக்களிலும் பல புதுச்சேரியிலேயே இயற்றப்பட்டவையாகும்.

சுமார் பத்து ஆண்டுகள் புதுவையில் வாழ்ந்திருந்த பின்னர், பாரதியார் சென்னைக்கு வந்தார். அவர் புதுவையிலிருந்த காலத்தில் அவரது வியாசங்

களை ஏற்று அவரை ஆதரித்து வந்த சுதேச மித்திரன் அவரை மீண்டும் ஓர் உபபத்திராசிரியராகக் கொண்டது. (காலஞ் சென்ற சுப்பிரமணிய ஐயர் காலத்திலும் சிலகாலம் பாரதியார் மித்திரனில் உபபத்திராசிரியராக இருந்தார்.) ஆனால் அவரை ஓர் உபபத்திராசிரியராகக் கொண்டிருக்கும் பாக்கியத்தை சுதேசமித்திரன் நீண்டகாலம் பெற்றிருக்கவில்லை; புதுவையில் அவர் வறுமையில் வாழ்ந்திருந்தபோது கஞ்சாப் பழக்கம் எவ்வாறோ அவரைப் பற்றிவிட்டது. அவர் தமிழ் நாட்டிற்குத் திரும்பி வந்த பின்னரும் அத் தீய வழக்கம் அவரை விடாமற் பற்றி முடிவில் அவர் வாணாள் விரைவில் முடிவதற்கும் காரணமாய் நின்றது. நண்பர்கள் சொல்லியும் கேளாமல், சென்னைக்கு வந்த பின்னரும் அவர் கஞ்சாவை அதிகமாக உட்கொள்ளத் தொடங்கிவிட்டார். அவர் வாழ் நாளில் பிற்காலத்தில் அவர் பாடிய பாடல்களிலும் கஞ்சாவெறியின் பயனை ஒருவாறு காணலாமென்றே நான் சொல்வேன்.

சென்னை திருவல்லிக்கேணியில் துளசிங்கப் பெருமாள் கோயில் வீதியில் ஒரு வீட்டில் 1921-ஆம்ஆண்டு செப்டம்பர் மாதம் 10-ந் தேதி இரவு பாரதியார் உயிர் துறந்தார். அன்று இரவு முழுமையும் நான் அவருடன் இருந்தேன். மற்ற நாட்களில் இருந்த கஞ்சா மயக்கத்துடன் அன்றிரவு அவரிடம் சாவு மயக்கமும் கலந்திருந்தது. நண்பர்களுக்குச் சாவாமை உபதேசஞ் செய்த பாரதியார் சாக நேர்ந்தது. பாண்டி நாட்டில்

எட்டையபுரத்தில் தோன்றிய உடல் தொண்டை நாட்டில் சென்னை திருவல்லிக்கேணியில் சாம்பலாகிக் கடலிலே கலந்தது.

நான் மேலே கூறிய வாறு, பாரதியார் தமிழுலகில் மின்னல்போலத் தோன்றி மறைந்தார். அவர் தமது அற்புதப் பாடல்களாலும், அதிசயமான கட்டுரைகளாலும் தமிழ் மக்களுக்குப் புத்துயிர் அளித்தார். எளிய நடையில், அரிய கருத்துக்களை ஏற்றி இன்பமான பாடல்கள் பாடுவதில் பாரதியார் இணையற்ற புலவராக விளங்கினார். அவர் பாட்டிலும் உரையிலும், தமிழ் மாது புதுமையும் இளமையும், இனிமையும் எழிலும், ஒளியும் உயர்வும் கொண்டு விளங்குகின்றாள். பழந்தமி ழன்னைக்கு இளமை யளித்த புலவர் பெருமக்களில் பாரதியார் ஒருவரென்று நான் போற்றுகின்றேன். தென்றலின் இனிமையையும், கடலின் பெருமையையும், வானத்தின் உயர்வையும், மலையின் மாட்சியையும் பாரதியார் தமிழிலே ஏற்றி யிருக்கிறார். பாவநாசத்து அருவியின் தெளிவை பாரதியார் பாடலிலே காணலாம். அவர் பாடல்களிலும் கட்டுரைகளிலும் பல தமிழ் இலக்கியத்தில் நிலையான இடம்பெறும் என்பதில் ஐயம் இல்லை.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு

என்பன போன்ற நாட்டுப் பாட்டுகளைப் படிக்கும் எவர் உள்ளந்தான் தேச பக்தியுடன் எழுச்சி பெருது?

அவர் பாடிய கண்ணன் பாட்டை அரவிந்தர் போற்றுகின்ருர். பாஞ்சாலி சபதம் வீரரசம் நிறைந்து விளங்குகிறது. "வீரத் தமிழ்ச் சொல்லின் சாரத்தை" அதிலே காணலாம். ஞான ரதம் இன்பக் கதை. அவரது கட்டுரைகளெல்லாம் இனிய, எளிய, தெளிய, அழகிய நடை; எல்லோருக்கும் விளங்கும் இன்பத் தமிழ்.

தமிழ்நாட்டின் தீவினைப் பயனுல் கஞ்சா நோய் பாரதியாரைப் பற்ருதிருந்தால், அவர் நெடுநாள் வாழ்ந்திருந்து தமிழில் இன்னும் எத்தனையோ அரிய பாடல்களையும், உரைகளையும் எழுதி யிருத்தல் கூடும். ஆனல் அவர் வறுமையின் கொடுமையால் மேற்கொண்ட கஞ்சா அவரைக் கொன்றுவிட்டது. அதற்குக் காரணம் தமிழ்ச் செல்வர்களே யாவர். தமிழ் நாட்டுச் செல்வர்கள் அவர் பெருமையை அறிந்து அவரை வறுமையில் வாட விடாமல், ஆதரித்திருந்தால், அவர் வறுமையில் வருந்திக் கஞ்சாவை நாட நேர்ந்திராது. ஆயினும், விதியின் கதி அவ்வாருயிற்று. புலவர் வறுமை புலவரைக் கொன்றது. ஆனல், இனியேனும் தமிழ் நாட்டில் தோன்றிவரும் அறிஞர்களை, புலவர்களை, கவிஞர்களை ஆதரிக்குமாறு நமது செல்வர்களுக்கு பாரதியாரின் கதி ஓர் எச்சரிக்கையா யிருக்கவேண்டும்.

பாரதியார் மக்கள் மீது அளவற்ற ஆர்வம் உடையவர். தமிழ்மீது தீராத காதல் கொண்டவர்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்!'

தேச விடுதலையில் அல்லும் பகலும் சிந்தனை கொண்டிருந்தார். தெய்வத்தின் மீது உறுதியான பக்தி கொண்டவர். ஜாதி வேற்றுமை யற்றவர். சமயத்திலே பெரும் பற்றுள்ளவர். சொல்லும் செயலும் ஒன்றுபட்டவர். பெண் விடுதலையில் பேரார்வம கொண்டவர்.

பாரதியார் காலஞ்சென்ற பின்னரே அவரது பாடல்களின் பெருமையைத் தமிழ் நாடு பெரிதும் அறியத் தொடங்கி யிருக்கிறது. ஆயினும், தமிழ் மக்கள் இன்னும் பாரதியாரைப் பூரணமாக அறியவில்லை. பாரதியார் தமது நூல்களைப் பதினாயிரக்கணக்காக அச்சிட்டு நாடெங்கும் பரப்ப வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தார். ஆனால் அவர் விருப்பம் அவர் நாளில் நிறைவேறவில்லை. பாரதியார் பாடல்களை லட்சக் கணக்காகப் பலமுறைகளில் அச்சிட்டு நாடெங்கும் பரப்ப வேண்டும். பாரதி பாடலை வாயுள்ள மக்களெல்லாம் பாடவேண்டும். செவியுள்ள மக்களெல்லாம் கேட்கவேண்டும். அதனால் தமிழ் நாடு பலவகைக் கட்டுகளினின்றும் விடுதலை பெற்றுப் புது வாழ்வு பெறுவதாகும். தமிழ் நாடும் தாய் நாடும் புதுவாழ்வும் பெரு வாழ்வும் பெற வேண்டுமென்பதே பாரதியாரின் கனவாக இருந்தது. அவர் கனவை நனவாகச் செய்வதற்கு அவர் பாடிய பாடல்கள் பெரிதும் துணை புரியுமென்பது எனது கருத்து. பாரதி வாழ்க! வந்தே மாதரம்!

Wrapper Printed at Shanti Press, Madras-1